**Chenkaantal**

*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 2, Special Issue - 3, October 2023** **E-ISSN: 2583-0481**

# Proto-Agriculture in the Sangam Period with Special Reference to *Malaipatukataam*

**Dr. R. Govindaraj**, Assistant Professor of Tamil, Thiagarajar College, Madurai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0007-8650-9666**
**DOI: 10.5281/zenodo.8397620**

## Abstract

*Numerous Tamil literature has been developed in the Sangam period. Classical literary works have been acclaimed as a unique entity in Tamil literature. The contribution of the Sangam texts has been indispensable for the reconstruction of ancient Tamil social history. With a total of 2381 songs, the Sangam literature proclaims the aesthetic sense of Tamil culture. The special feature of Pattupattu encompasses a separate literary genre called 'Aatrupadai'. Aatrupadai poems elucidate the emotional ecstatic feelings of an individual and nature. "Malaipadukadam" is one among the Pattupattu anthology and the biggest of all the Aatrtupadai poems. This poem was sung by Iraniya Muttathu Perungunur Perungausikanar about Palkundak Kotattatuch Senkan Mathuvel Nannansey Nannan in 583 lyrics. Palgundra Kottam refers to the Seyyar and Javvad hills in the North-Eastern part of Thondai Nadu. About twelve inscriptions provide evidence that the Naviramala referred to by "Malapadukadam" is the present Javvadu hill. "Malaipadugadam" mentions the Nannan hill's crops such as foxtail millet, kodo millet, paddy, sugarcane, plantain, sesame, mustard and cluster beans that have been cultivated by the farmers. Hence, this article explains the proto-agricultural methods in the Sangam period regarding "Malaipadugadam".*

**Keywords:** Proto-Agriculture, Sanga Period, *Malaipadugadam*, Tamil People.

## Reference books.

[1] Rajamanikkanar, M, Dr, *Patthupattu Aaraaycchi*. Sahitya Akademi Publication, 2016.
[2] Sathish, G. P*andaiya Tamil Panuvalkal*. NCBH Veliyedu, Chennai – 98, 2016.
[3] Sathish, G. "*Sangakaala Thinaikkudikal*." *Ungal Noolagam*, May 2016.
[4] Subramaniyan, S.V. *Sanga Ilakkiyam Pattuppattu*." Kovilur Madalayam Nelieedu, 2003.
[5] Bakthavatsala Bharathi. *Ilakkiya Manithaviyal*. Adaiyalam Velieedu, Trichy-10, 2014.
[6] *Pattuppaattu Mulamum Uraiyum*. New Century Book Store, Chennai - 98.
[7] Balamurugan. *Senthamil Monday Magazine*. June 2015.
[8] Mahalingam, P. Dr., & Letchumi J. R, Sangakaala Samugatthin Panmuga Nilai Patthupattu Vazhi Nokku, Department of Tamil, Presidency College, Chennai -06.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054 இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

# மலைபடுகடாம் பனுவலில் தொல் வேளாண்மை வடிவம்

**முனைவர் ரே. கோவிந்தராஜ்**, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி,
மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0007-8650-9666**
**DOI: 10.5281/zenodo.8397620**

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க காலம் தொடங்கிச் சமகால வரையில் எண்ணற்ற தமிழ் இலக்கியங்கள் வளர்ச்சிப் பெற்று உள்ளன. செந்தமிழ் இலக்கியங்களில் தனித்த சிறப்புக்குரியனவாய்ச் செவிலக்கியங்கள் போற்றப்படுகின்றன. பண்டைய தமிழ்ச் சமூக வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வதற்குச் சங்க நூல்களின் பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது. பாட்டும் தொகையுமாக 2381 பாடல்களைக் கொண்டு தமிழர் மாண்பைப் அவ்விலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை என்னும் தனி ஒரு இலக்கிய வகை பரிணமித்திருப்பது பத்துப்பாட்டின் தனி சிறப்பாகும். இந்த ஆற்றுப்படை பாடல்களில் உணர்ச்சி மயமான எழுச்சி பாடல்கள் ஆற்றுப்படை நூல்கள் தெளிவு படுத்துகின்றன. உள்ளதை உள்ளவரே படிப்போரின் மனதை ஏற்கும் படியாக அமைக்கப்பட்டுள்ள இயற்கை வர்ணனையோடு பாடப்பட்டுள்ள இலக்கியம் மலைபடுகடாம் ஆகும். பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றாகவும் ஆற்றுப்படை பாடல்களில் பெரியதாகவும் மலைபடுகடாம் அமைந்துள்ளது. இப்பாடல் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் என்பவரால் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னனைப் பற்றி 583 பாடல் வரிகளில் பாடியுள்ளார். பல்குன்றக் கோட்டம் என்பது தொண்டை நாட்டில் வடகிழக்குப் பகுதியாகிய செய்யாறு மற்றும் ஜவ்வாது மலைப் பகுதிகளைக் குறிக்கின்றது. மலைபடுகடாம் குறிப்பிடும் நவிரமலை இன்றைய ஜவ்வாது மலையே என்பதற்கான சான்றுகள் சுமார் பன்னிரண்டு கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. மலைபடுகடாம் குறிப்பிடும் நன்னனது மலை நாட்டு வேளாண் பொருட்களான 1. தினை 2. வரகு 3. நெல் 4. கரும்பு 5. வாழை 6.எள் 7. கடுகு 8. அவரை ஆகியவற்றை கூத்தர்கள் காட்சிப்படுத்தி உள்ளனர். அவைகள் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.*

**திறவுச் சொற்கள்:** முதற் விவசாயம், சங்க காலம், மலைபடுகடாம், தமிழ் மக்கள்.

## முன்னுரை

சங்க காலம் தொடங்கிச் சமகால வரையில் எண்ணற்ற தமிழ் இலக்கியங்கள் வளர்ச்சிப் பெற்று உள்ளன. செந்தமிழ் இலக்கியங்களில் தனித்த சிறப்புக்குரியனவாய்ச் செவிலக்கியங்கள் போற்றப்படுகின்றன. பண்டைய தமிழ்ச் சமூக வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வதற்குச் சங்க நூல்களின் பங்களிப்பு இன்றியமையாதது. பாட்டும் தொகையுமாக 2381

பாடல்களைக் கொண்டு தமிழர் மாண்பைப் அவ்விலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை என்னும் தனி ஒரு இலக்கிய வகை பரிணமித்திருப்பது பத்துப்பாட்டின் தனி சிறப்பாகும். இந்த ஆற்றுப்படை பாடல்களில் உணர்ச்சி மயமான எழுச்சி பாடல்கள் ஆற்றுப்படை நூல்கள் தெளிவு படுத்துகின்றன. உள்ளதை உள்ளவரே படிப்போரின் மனதை ஏற்கும் படியாக அமைக்கப்பட்டுள்ள இயற்கை வருணனையோடு பாடப்பட்டுள்ள இலக்கியம் மலைபடுகடாம் ஆகும்.

**மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)**

*பத்துப்பாட்டு* நூல்களில் ஒன்றாகவும் ஆற்றுப்படை பாடல்களில் பெரியதாகவும் மலைபடுகடாம் அமைந்துள்ளது. மலைபடுகடாம் என்னும் நூலுக்குக் கூத்தர் ஆற்றுப்படை என்ற பெயரும் உண்டு, இந்நூலைப் பாடியவர். இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார். இந்த நூலின் பாட்டுடைத் தலைவன் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் என்னும் அரசன் ஆவான். அரசிடம் பரிசில் பெற்ற கூத்தன் (கூத்தன் – பாடல்கள் பாடி இசை வாசித்துக்கொண்டு நடனம் ஆடுவோர்). மற்றொரு பரிசில் வேண்டி நிற்கும் கூத்தனை ஆற்றுப்படுத்துவதால் இது கூத்தர் ஆற்றுப்படை எனப் பெயர் பெற்றது. இது 583 அடிகளை உடையது. மலை வழிகள் நன்கு விளக்கப்படுகின்றன. வேடுவர் தாம் செல்லும் வழியின் அடையாளம் காணப் புல்லை முடிந்துவைப்பர். நன்னனின் நவிரமலை, அதில் ஓடும் சேயாறு. இதன் முடிவில் மன்னனின் செங்கண் மாநகரம் ஆகியவை விளக்கப்படுகிறது. வழிப்பாதைகளை ஒரு சுற்றுலா வழிகாட்டிபோல் சுவையாகக் கூறிச் செல்லும் நூல் மலைபடுகடாம் ஆகும். காட்டிலுள்ள பலாப்பழத்திற்குக் கூத்தரின் மத்தளம் உவமையாகிறது. ஆந்தையின் அலறலுக்குச் சிறுபறையின் ஓசை உவமையாகிறது. இடம் கருதி இயல்பாய் அமையும் உவமைகள் பெருமை சேர்க்கின்றன. இப்பாடல் குறிப்பிடும் பல்குன்றக் கோட்டம் என்பது தொண்டை நாட்டில் வடகிழக்குப் பகுதியாகிய செய்யாறு மற்றும் ஜவ்வாது மலைப் பகுதிகளைக் குறிக்கின்றது. நவிரமலை இன்றைய ஜவ்வாது மலையே என்பதற்கான சான்றுகள் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. எனவே நன்னனது மலை நாடு, அடிவார பகுதியான முல்லை நிலம் மற்றும் மருத நில வேளாண் பொருட்களை கூத்தர்கள் இப்பாடலில் காட்சிப்படுத்துகின்றனர். எனவே இக்கட்டுரை மலைபடுகடாம் காட்டும் வேளாண்மை குறித்து ஆராய்கிறது.

வேள் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்த வேளாண்மை என்னும் சொல் பொதுவாக கொடை, ஈகை ஆகியவற்றைக் குறிக்கும். (கதிர்வேற்பிள்ளை ந, தமிழ் மொழி அகராதி, சாரதா பதிப்பகம்) நிலமானது தரும் கொடையாதலால் இப்பெயர் வழங்கியிருக்கலாம். வேளான் என்னும் சொல் வெள்ளத்தை (நீரை) ஆள்பவன் என்னும் பொருளது என்பர். (அபிதான சிந்தாமணி. பக். 1518) வேட்டைச் சமூகம், மேய்ச்சல் சமூகமாக மாற்றம் பெற்றது. மேய்ச்சல் புலப்பெயர்வுகளின் மூலம் வேளாண் மையில் ஈடுபட்டனர். இவ்வகையில் வேளாண் சமுதாயம் வளர்ந்தது என்று குறிப்பிடுவது பொருந்தும்படி இல்லை. எவ்வகை நிலமாக இருந்தாலும்

அதில் வாழ்ந்த மனிதன் தொடக்கத்தில் வேட்டையும் அதன்பின் காலப் பரிமாணத்தில் நிலம்சார் சூழல்களையும் பருவகால அறிவையும் பெற்று அந்நிலத்தில் உள்ள மிகுதியான பொருள்களைக் கொண்டே தன்னுடைய (Subsistence Economy) பொருளாதார நடவடிக்கைகளை வளர்த்துக் கொண்டனர் (சதீஸ் கோ, பக்: 56, உங்கள் நூலகம் - மே 2016). நமது முன்னோர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே வேளாண் தொழிலை மேற்கொண்டு வந்துள்ளனர். வேளாண்மையின் வளர்ச்சியும் முன்னேற்றமும் வெவ்வேறு தட்பவெட்ப நிலைகள், பண்பாடுகள், தொழில்நுட்பங்கள் போன்றவற்றைச் சார்ந்து இருந்துள்ளன. வேளாண்மை குறித்து மேற்கண்ட கருத்துக்களை ஆய்வாளர்கள் குறிப்பிடுவதை அறிய முடிகின்றன. வறுமையுற்று இருந்த கூத்தர்கள் மேற்குத் திசையில் இருந்து நவிரமலை வழியாக நன்னனது நாடான செங்கண்மா நகரத்திற்குப் பரிசில் பெற செல்கின்றனர். அவ்வாறு செல்லும் போது வழி நெடுகிலும் கூத்தர்கள் கண்ட வேளாண்மைப் பொருட்களை மற்றொரு கூத்தனுக்கு ஆற்றுப்படுத்தும் தருணத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. உணவு தேடலின் பின்புலத்தில் தோன்றியதே வேளாண்மை ஆகும். நன்னனுடைய மலைகளைச் சேர்ந்த குறிஞ்சி நிலத்தார் பெண் நாய் கடித்த உடும்பின் இறைச்சியையும் கடமான் இறச்சியையும் பன்றி இறைச்சியும் உண்டனர்; வேட்டையாடுதல் மூலம் கிடைத்த உணவே முதன்மையானதாக இருந்திருக்கிறது. நெல்லாற்சமைத்த கள்ளையும் தேனாற் செய்த மூங்கிற்குழையுள் முற்றிய கள்ளையும் பருகினர்; என்ற குறிப்பு காணப்படுகிறது. எனவே, நெல் இன்றைய ஜவ்வாது மலையில் பயிர் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை காண முடிகிறது. மேலும், பலாக்கொட்டை, மா, புளிநீர், மோர் ஆகிய இவற்றை கொண்டு தயாரித்த குழம்பையும் மூங்கில் அரிசிச் சோற்றையும் உண்டனர் (மலைபடுகடாம், அடி. 171 - 183). மலைபடுகடாம் குறிப்பிடும் பலாக்கொட்டை, புளி முதலான உணவுப் பொருள்கள் இன்றைய ஜவ்வாது மலையில் காண முடிகிறது. மேலும், முக்கிய வேளாண் பொருள்களாகப் பின்வருவனவற்றை *மலைபடுகடாம்* குறிப்பிடுகிறது. 1.தினை, 2. வரகு, 3. நெல், 4. கரும்பு, 5. வாழை, 6.எள், 7. கடுகு, 8. அவரை ஆகியவை இந்நூலில் காணமுடிகின்றன.

**1. தினை**

சங்க காலத்தில் தினை புன விவசாயம் இரு வேறு நிலைகளில் நடைபெற்று உள்ளது. மலைச்சாரலில் காந்தல் கிழங்கைப் பன்றிகள் கிளறி உண்டதால் உழுத நிலம் போல் அமைய அவ்விடத்தில் சிறுதினை ஐவனம் ஆகியவற்றை விதைத்தனர். உழாது தினை விதைத்த இம்முறையை புறநானூறு 168 வது பாடல் குறிப்பிடுகிறது. தினைப்புன விவசாயத்தின் பல்வேறு தன்மைகள் குறித்து விளக்கும் பாடல்கள் பல உள்ளன. *ஐங்குறுநூறு* (252, 259, 266, 270, 295) *அகநானூறு* ( 140, 194), *நற்றிணை* (122, 209) *குறுந்தொகை* (198), *புறநானூறு* (120, 159, 168, 231) ஆகிய சங்க இலக்கிய பாடல்களில் தினை குறித்தப் பதிவுகள் காணப்படுகின்றன.

**பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்ப**

**கொய்பதம் உற்றன குலவுக்குரல் ஏனல் (மலைபடு., பா. 107- 108)**

பொய்யாக விளையாட்டுப் போர் நிகழ்த்தும் யானை கன்றுகளின் இணைந்த கைகள் போல தினைக் கதிர்கள் இருந்தன என்பதனை மலைபடுகடாம் குறிப்பிடுகிறது. இன்றளவும் நவிரமலையில் (ஜவ்வாது மலையில்) தினைப் பயிர் வேளாண்மை காட்டேரிப்பு வேளாண்மையாக நிகழ்ந்துக் கொண்டிருக்கிறது.

**2. வரகு**

குறிஞ்சி நிலத்திலும் முல்லை நிலத்திலும் முக்கிய வேளாண் பொருளாக வரகு இருந்துள்ளதைப் *புறநானூறு* (120: 2, 197: 12, 215: 1) *அகநானூறு* (194: 9-12, 393: 4 - 6) போன்ற சங்க பாடல்களில் காண முடிகின்றன. நவிரமலையிலும் தினை வேளாண்மை செய்த பதிவினை மலைபடுகடாம் குறிப்பிடுகிறது. எருமை மாடுகள் கிடத்தல் போன்ற பாறைகள் கிடந்த பெருவழியில் தருக்கம் கூறுவான் கைவிரல்கள் இணைந்தால் போன்று இணைந்த வரகுக்கதிர்கள் முற்றி வளைந்துக் கிடந்தன என்பதனை,

**...மேதி அன்ன கல்பிறங்கு இயவின்**
**வாதிகை அன்ன கவைக்கதிர் இறைஞ்சி**
**இரும்புகவர் உற்றன பெரும்புன வரகே. (மலை., 111-113)**

இப்பாடல் வரிகள் குறிப்பிடுகின்றது. எனவே வரகு குறிஞ்சி நிலத்திலும் முல்லை நிலத்திலும் முக்கிய வேளாண் பொருளாக இருந்திருப்பதை அறிய முடிகிறது. முதலில் குறிஞ்சி நிலத்திற்கும் அதன் பிறகு முல்லை நிலத்திற்கு உரிய கருப்பொருளாக மாறி இருக்கிறது. இவ்வரகுக் குறித்துச் செய்தியியை நற்றிணை பாடலிலும் (121: 1 - 5) காண முடிகிறது.

**3. நெல்**

தமிழ் இலக்கியங்களில் வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டுள்ளது. பழந்தமிழகத்தில் மக்களின் தலையாய வாழ்க்கை முறையாக உழவுத் தொழில் இருந்திருக்கிறது. உழவும் உழவு சார்ந்த தொழில்களும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயித்தன. தமிழ் இலக்கியங்களில் நெல் சாகுபடி பற்றியும் அவற்றின் ரகங்களைப் பற்றியும் அதிகமாக எழுதப்பட்டுள்ளது. இதிலிருந்து நெல் ஒரு முதன்மைப் பயிராகப் பழங்காலத்திலிருந்தே விளங்கியிருக்கிறது என்பது தெரிகிறது. *எட்டுத்தொகை* நூல்களான குறுந்தொகை, பதிற்றுப்பத்து, நற்றிணை மற்றும் பத்துப்பாட்டு நூல்களான *மதுரைக்காஞ்சி, பொருநராற்றுப்படை*, மேலும், சிற்றிலக்கியங்களில் முக்கூடற்பள்ளு போன்ற பல தமிழ் இலக்கியங்கள் நெல் ரகங்களைப் பற்றிப் பறைசாற்றியிருக்கின்றன. குறுந்தொகையில் 'செந்நெல் அமலை வெண்மை வெள்இழுது' என்ற வரியில் 'செந்நெல்' என்ற நெல் ரகம் சிவந்த நிறத்தில் காணப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 'அருவி பரப்பின் ஐவனம் வித்தி' என்ற வரியில் அருவியைக் கொண்டிருக்கும் இடத்தில் வளரக்கூடிய மலை நெல்லான 'ஐவனம்' என்ற நெல்லின் சிறப்புகளை அறிந்துகொள்ளலாம். மலைபடுகடாம் குறிஞ்சி நிலத்தில் விளைந்த ஐவனநெல் பற்றிய பதிவை தருகிறது.

**ஆழ்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்பு**
**வாலியின் விளைந்தன ஐவனம் வெண்ணெல். (மலை., 114-115)**

எனவே, வேளாண்மை குறிஞ்சி நிலத்திலும் நெல் விளைந்திருக்கிறது என்பதை மலைபடுகடாம் வழி அறியமுடிகிறது. இன்றளவும் ஜவ்வாது மலையில் தொன்ன நெல் என்ற பெயரில் புன்செய் மலை நிலத்தில் மானாவாரியாக விதைக்கப்படுகிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. சங்ககாலத்தில் மலைப்பகுதிகளில் நெல் வேளாண்மை செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கான மேற்கண்ட சான்றுகளை வைத்து அறிந்து கொள்ள முடிகிறது.

**4. கரும்பு**

கரும்பை அதியமான் பரம்பரையினர் வேற்று தேசத்திலிருந்து கொண்டு வந்தனர் என்கிற செய்தியை, “அரும் பெறல் அமிழ்தம் அன்ன / கரும்பு இவன் தந்தோன் பெரும் கடலையே” (புறம். 392: 20-21) ஔவையாரின் பாடல் சான்று பகர்கிறது. மேலும், *புறநானூறு* 322 ஆம் பாடலும் பெரும்பாணாற்றுப்படையில் 161, 162 பாடல் வரிகளும் கரும்பு இருந்ததற்கான சான்றைத் தருகின்றன. அதேபோல் *ஐங்குறுநூறு* 55, 91, ஆகிய பாடல்களும் கரும்பைப் பழனவெதிர் என்று குறிப்பிடுகிறது. கரும்பு வேளாண்மை தொண்டை நாட்டுப் பகுதிகளில் அதியமான் ஆட்சிக்கு உட்பட்ட இடங்களில் நிகழ்ந்திருக்கிறது. அவற்றில் நவிரமலையாகக் கருதுகிற ஜவ்வாது மலை அடங்குகிறது. இப்பகுதியில் உப்பு அரிதான ஒன்றாக இருந்த காரணத்தினால் உணவு பதப்படுத்தலில் கரும்பின் மூலம் செய்யப்பட்ட வெல்லத்தைக் கொண்டு செய்துள்ளனர். இன்றளவும் அதன் தொடர்ச்சயைக் காண முடிகிறது. குறிப்பாகப் பன்றி, ஆடு முதலான இறைச்சிகளைப் புளியோர் போட்டு மாதக்கணக்கில் வைத்து உண்ணுகின்றனர். மலைபடுகடாம் இதனைப் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**வேல் ஈண்டு தொழுதி இரிவுற் றென்னக்**
**காலுறு துவைப்பின் கவிழ்க்கனைத்து இறைஞ்சிக்**
**குறைஅறை வாரா நிவப்பின் அறையுற்று**
**ஆலைக்கு அலமரும் தீங்கழைக் கரும்பே (மலைபடு., 116 - 119)**

வேல் படையின் தொகுதி போன்றிருந்த கரும்புகள் கட்டுப்போனது போன்று மிகுதியான காற்று மோதுதலால் ஓசையுடன் சாய்ந்து, குறைதலும் அறுத்தலும் இல்லாமல் உயர்ந்து வளர்ந்து அறுக்கப் பெற்றுக் கரும்பாலைக்குச் சென்றன என்கிற செய்தி புலப்படுகிறது. மலையில் விளையும் நெல்லையும் அதன் அடிவாரப் பகுதியில் நீர் பாய்ச்சுதல் மூலம் விளையும் ஐவண நெல் மற்றும் கரும்பு குறித்த பதிவுகளையும் கூத்தர்கள் குறிஞ்சி முல்லை மருதம் என மூன்று நிலவேளாண் பொருள்களைக் காட்சிப்படுத்துவதை காண முடிகிறது.

**5. வாழை**

சங்க இலக்கியங்களில் *பொருநராற்றுப்படை*, *சிறுபாணாற்றுப்படை*, *பெரும்பாணாற்றுப்படை*, *குறிஞ்சிப்பாட்டு*, *பட்டினப்பாலை* முதலான இலக்கியங்களில்

வாழை குறித்தான பதிவு இடம் பெற்றுள்ளன. **“கோள் தெங்கின் குலை வாழை / கொழும் காந்தள் மலர் நாகத்து” – (பொரு. 208,209)**, மால் வரை ஒழுகிய “வாழை வாழை /பூ என பொலிந்த ஓதி ஓதி” – (சிறு. 21,22), “குலை முதிர் வாழை கூனி வெண் பழம்” வாழை வள்ளி நீள் நறு நெய்தல்” – (குறிஞ். 79), “கோள் தெங்கின் குலை வாழை / காய் கமுகின் கமழ் மஞ்சள்” – (பட்.16,17) எனச் சங்ககாலத்தில் வாழை முக்கிய பொருளாதாரம் இருக்கிறது என்பதைக் காண முடிகிறது. மலைபடுகடாமில் வாழை குறித்த செய்தி,. காம்பில் உள்ள வேல், யானை முகத்தில் பாய்ந்தது போன்று, முறைபட மலர்ந்த வாழைப்பூக்கள் அருகில் இருக்கும் பாறையில் குத்தி நின்றன. அவ்வாறுள்ள வாழைச்சோலை காய்கள் நெருங்கி நன்கு பழுத்துப் பயன்படும் நிலையில் முறையாக அசையும் என்பதனைப் பின்வரும் பாடல் கூறுகிறது. **துறுகல் சுற்றிய சோலை வாழை / இறுகு குலை முறுக பழுத்த பயம் புக்கு (மலை., 131, 132)** சங்க கால மக்களின் வாழ்வியலோடு முக்கிய புழங்கு பொருளாகவும் வேளாண் பொருளாகவும் வாழை இருந்துள்ளதை அறிய முடிகின்றன. மலைபடுகடாம் குறிப்பிடும் நவிர மலையில் வாழை முக்கிய புழங்கு பொருளாக இன்றளவும் இருந்து வருகிறது.

**6. எள்**

தமிழர்கள் நல்லெண்ணெய் எடுப்பதற்குப் பயன்படுத்தும் முக்கிய விதை எள்ளாகும். சங்க இலக்கியத்தில் எள் என்னும் சொல் பத்து இடங்களில் பயின்று வந்துள்ளது. “கொவை அஞ்சிற் காமா மெய்க்கும் / எள்ளற விடினே உள்ளது நானே.” (குறுந். 112: 2) “பழமழை பொழிந்தெனப் பதனழிந் துருகிய / சிதட்டுக்காய் எண்ணின் சில் பெயல் கடைநாள்” (குறுந். 261: 12). பழைய மலை பொழிந்ததால் பதனழிந்து உள்ளீடற்ற எள்ளின் காயை உடைய கார் பருவ மழை இறுதி நாள் என்று குறிப்பிடுகிறது. எள் தமிழக நன்செய் பெயராகவும் ஐந்திணைக்கும் உரிய கருப்பொருளாயினும் மருதம் குறுஞ்சி என்னும் இரு நிலத்திலேயே பெருக பயிராகும்.' (பாலமுருகன். ப: 7) **கௌவை போகிய கரும் காய் பிடி ஏழ் / நெய் கொள ஒழுகின பல் கவர் ஈர் எண் (மலை., 102-106)** நீல நிறமாக வளர்ந்திருந்த எள் செடியுள்ள நிலத்தில், மகுளி என்ற எள் நோய் பரவாது மலைச்சாரல் பெய்ததால், நீர் மொள்ளும் சாலைப் போன்ற சுனைகளை உடைய காட்டிடத்தில் எள்ளின் இளங்காய் போய் முதிர்ந்த கரிய காய் ஒரு பிடியில் ஏழு காய்கள் விளைந்தது, நெய் உடையனவாய் பல கிளைகளை உடையனவாய் வளர்ந்திருக்கும் பசிய எள் செடிகள் என மலைபடுகடாம் குறிப்பிடுகிறது. இவ்விலக்கியம் குறிப்பிடும் மலை இன்றைய ஜவ்வாது மலையே நவிரமலை என்பதை அங்குள்ள சுமார் பன்னிரண்டு கல்வெட்டு குறிப்புகள் சான்று பகர்கின்றன. எனவே மலைபடுகடாம் குறிப்பிடும் இன்றைய ஜவ்வாது மலையில் எள் மிகுதியாக இன்றளவும் பயிர் செய்யப்படுகிறது.

**7. கடுகு**

பழங்காலத்தில் கடுகு முக்கிய வேளாண்மை பொருளாக இருந்த செய்தியைப் சங்க பனுவல்கள் குறிப்பிடுகின்றன. “நறும் காழ் கொன்று கோட்டின் வித்திய / குறும் கதிர் தோரை நெடும் கால் ஐயவி/ ஐவன வெண்ணெலொடு அரில் கொள்பு நீடி” – (மது. 286-288),

**ஐயவி அன்ன சிறு வீ ஞாழல் (குறுந்., 50)**

**ஐயவி அமன்ற வெண் கால் செறுவில் (மலை., 123)**

மலைபடுகடாமும் உலாது விதைத்த வெண்சிறு கடுக, களைக்கொத்தியால் கொத்தப்பட்டு தோட்டங்களில் செரிந்து விளைந்தன என்கிற செய்தியைக் குறிப்பிடுகின்றது. குறிஞ்சி நில மக்களின் வேளாண் பொருள்களில் குறிப்பிடத்தக்கதாக வெண்சிறு கடுகு இருந்தமையை அறிய முடிகின்றன.

**8. அவரை**

சங்க இலக்கியத்தில் அவரைப் பயிரிட்டதற்கான சான்றுகள் குறுந்தொகை (82. 3 - 4) அகநானூறு (294: 9 - 11) ஆகிய பாடல்களில் காணப்படுகிறது. குறிஞ்சி நிலத்தில் விளையும் வேளாண் பொருளாக அவரை இருந்துள்ளதைத் தயிரின் சிதறுண்ட துளிகள் போன்று அவரை பூக்கள், கூத்தர்கள் பயணித்த மலை வழியில் உதிர்ந்து கிடந்தன என்றும் தினைக் கதிரை கொய்து விட்ட தாளில் அறிவாளை போன்று வளைந்து அவரைக்காய்கள் தொங்கின என்பதைப் பின்வரும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றது.

**விளைதயிர் பிதிர்வின் வீஉக்கு இருவிதொறும்**

**குளிர்புரை கொடுங்காய் கொண்டன அவரை. (மலை., 109 - 110)**

**முடிவுரை**

கூத்தர்களை ஆற்றுப்படுத்தும் நோக்கில் மலைபடுகடாம் அமைந்திருந்தாலும் நவிரமலையான இன்றைய ஜவ்வாது மலை முல்லை நிலமாகவும் குறிஞ்சி நிலமாகவும் இருந்திருக்கின்றது. இம்மலையில் உற்பத்தியான செய்யாற்றின் நீர் பெருக்கத்தினால் அதன் அடிவாரப் பகுதிகள் மருத நிலமாக செழித்து இருக்கிறது. நவிரமலையில் தினை, வரகு, நெல், கரும்பு, வாழை, எள், கடுகு, அவரை ஆகிய வேளாண் பொருட்கள் சங்க காலத்தில் விளைவிக்கப்பட்டதை அறிய முடிகின்றன. அதன் தொடர்ச்சி (ஜவ்வாது மலையில்) இன்றளவும் தொடர்வதைக் காண முடிகிறது. இவ்வகையான பயிர் விளைவித்தல் மூல தொல் காலத்தில் தமிழர்களிடம் வேளாண்மை நுட்பங்களை அறிந்து இருந்தனர் என்பதை அறியமுடிகிறது. இந்தப் பயிர்களைப் பயிரிடுவதற்குச் கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். குறிப்பாக்க களை எடுக்கும் நுட்பத்தையும் அதனை அகற்றுவதற்கான கருவியினையும் பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு மனித நாகரிகம் வளர்கிறது என்பதை அவர்கள் பயன்படுத்தும் தொழில் நுட்பத்தையும் அம்மக்கள் உருவக்கும் கருவிகளுக்கு அவர்கள் மொழியில் பெயர் வைக்கப்படுவதையும் வைத்து அறிந்துகொள்ள முடிகிறது.

**குறிப்புப் பட்டியல்**

[1] இராசமாணிக்கனார், மா. முனைவர். *பத்துப்பாட்டு ஆராய்ச்சி.* சாகித்திய அகாதமி வெளியீடு, புதுதில்லி. 2016.

[2] சதீஸ், கோ. *பண்டையத் தமிழ்ப் பனுவல்கள்.* NCBH வெளியீடு, சென்னை – 98, 2016.

[3] சதீஸ், கோ. “சங்ககால திணைக்குடிகள்.” *உங்கள் நூலகம்*, மே 2016.

[4] சுப்பிரமணியன், சா.வே. *சங்க இலக்கியம் பத்துப்பாட்டு*. கோவிலூர் மடாலையும் வெளியீடு. 2003.

[5] பக்தவத்சல பாரதி. *இலக்கிய மானிடவியல்*. அடையாளம் வெளியிடு, திருச்சி-10, 2014.

[6] *பத்துப்பாட்டு மூலமும் உரையும்*. இரண்டு பகுதிகள், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை - 98.

[7] பாலமுருகன். *செந்தமிழ் திங்கள் இதழ்*. ஜூன் 2015.

[8] மகாலிங்கம், ப. முனைவர்., & இலட்சுமி, ஜே. ஆர். முனைவர். *சங்க காலச் சமூகத்தின் பன்முக நிலை பத்துப்பாட்டு வழி நோக்கு*. தமிழ் துறை மாநிலக் கல்லூரி, சென்னை வெளியீடு.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.